தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்
எண்.100 அண்ணா சாலை, கிண்டி, சென்னை – 600 032
தொலைபேசி 044–22201337
மின்னஞ்சல் முகவரி : ombudsmanlocal@tn.gov.in

**முன்னிலை : திரு. மகேசன் காசிராஜன், இ.ஆ.ப (ஓ)**
**தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்**

ஆணை எண். 120/ந/2024

நாள்.07.05.2025

திரு.K.கணேசன்,
துறையூர், திருச்சிராப்பள்ளி மாவட்டம் – முறையீட்டு மனுதாரர்

நகராட்சி ஆணையர்,
துறையூர் நகராட்சி, துறையூர்,
திருச்சிராப்பள்ளி மாவட்டம். – எதிர்மனுதாரர்

திருச்சிராப்பள்ளி மாவட்டம், துறையூர், வடக்கு ரத வீதி, கதவு எண்.50 என்கிற முகவரியில் வசிக்கும் திரு.K.கணேசன் என்பவரின் 08.08.2024 நாளிட்ட புகார் மனு இம்முறைமன்ற நடுவத்தில் 09.08.2024 அன்று பெறப்பட்டு, 120/ந/2024 என எண்ணிடப்பட்ட முறையீட்டு மனுவாக பதிவு செய்யப்பட்டது. மனுதாரரின் முறையீட்டு மனு பரிசீலிக்கப்பட்டு கீழ்க்காணும் ஆணை வெளியிடப்படுகிறது.

## ஆணை

திருச்சிராப்பள்ளி மாவட்டம், துறையூர், வடக்கு ரத வீதி, கதவு எண்.50 என்கிற முகவரியில் வசிக்கும் திரு.K.கணேசன் என்பவர் தமது 08.08.2024 நாளிட்ட புகார் மனுவில் கீழ்க்கண்டவாறு தெரிவித்துள்ளார்:

"நான் துறையூர் நகராட்சியில் 03.02.1987 முதல் தினக்கூலி பணியாளராக பணிபுரிந்து வந்துள்ளேன். ந.க.எண்.3839/99/சி.1 நாள் 18.02.2000 அரசாணை எண்.125 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை நாள் 27.05.1999. மேற்படி அரசாணையின்படி மின் கம்பி உதவியாளராக பணி நியமனம் செய்யப்பட்டேன். தினக்கூலி பணிக்காலம் 03.02.1987 முதல் 17.02.2000 வரை 13 வருடங்கள் (பதிமூன்று வருடங்கள்) அரசாணை 125ன்படி 18.02.2001 தேதியில் என்னை காலமுறை ஊதியத்தில் கொண்டு வர வேண்டும். அல்லது 18.02.2000 முதல் 3 வருடம் (மூன்று வருடம்) கழித்து 18.02.2003 தேதியில் காலமுறை ஊதியத்தில் கொண்டு வர வேண்டும். நிர்வாக தவறு காரணமாக 23.02.2006 தேதியில் பணி நிரந்தரம் செய்யப்பட்டேன். 01.04.2003 தேதிக்குப்பின் பணி நிரந்தரம் செய்யப்பட்டவர்களுக்கு ஓய்வூதியம் கிடையாது.

மின்கம்பி உதவியாளர் பணியிடம் நானாக கேட்டு எனக்கு வழங்கப்படவில்லை. அலுவலகம் மூலமாக எனக்கு மின்கம்பி உதவியாளர் பணியிடம் வழங்கப்பட்டது.

அதே சமயம் 3839/99/சி1 நாள் 18.02.2000 பணி நியமன ஆணையில் வரிசை எண்.12ல் திரு.கோவிந்தராஜ் என்பவருக்கு தூய்மை பணியாளர் பணியிடத்தில் பணி நியமனம் செய்யப்பட்டுள்ளார். அன்னார் தினக்கூலியாக பணியில் சேர்ந்த நாள் 01.10.1995 ஆகும். நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் (நபு3) துறை அரசாணை (நிலை) எண்.71 நாள் 05.05.1998

(ii) நகராட்சிகளில் 31.12.1996 முடிய ஐந்து ஆண்டு முதல் 10 ஆண்டு வரை பணிபுரிந்துள்ள பதிலி துப்புரவுப் பணியாளர்களை நியமிக்கும் பட்சத்தில் மாதந்தோறும் ரூ.2,000/– என்ற தொகுப்பூதியத்தில் நியமனம் செய்யப்பட வேண்டும்.

(iii) நகராட்சிகளில் 31.12.1996 முடிய ஐந்து ஆண்டுகளுக்கு குறைவாக பணிபுரிந்துள்ள பதிலி துப்புரவுப்பணியாளர்கள் மற்றும் வேலை வாய்ப்பகம் மூலம் புதிதாக நியமிக்கப்பட்டவர்கள் மாதந்தோறும் ரூ.1500/– என்ற தொகுப்பூதியத்தில் நியமனம் செய்யப்பட வேண்டும். (ந.க.எண்.3839/99/சி1 நாள் 18.02.2000ன் பணி நியமன ஆணை வரிசை எண்.12–ல் திரு.கோவிந்தராஜ் தினக்கூலியாக பணியில் சேர்ந்த நாள் 01.10.1995 ஆகும். மேலே கண்ட அரசாணை 71–ன்படி (ii) நகராட்சிகளில் 31.12.1996 முடிய ஐந்து ஆண்டுகள் முதல் பத்து ஆண்டுகள் வரை பணிபுரிந்துள்ள துப்புரவுப் பணியாளர்களை மாதந்தோறும் ரூ.2000/– என்ற தொகுப்பூதியத்தில் நியமனம் செய்யப்பட வேண்டும். அன்னார் திரு.கோவிந்தராஜ் 01.10.1995 முதல் 31.12.1996 வரை 1 வருடம் 2 மாதம் தான் பணிபுரிந்துள்ளார். திரு.கோவிந்தராஜ் 3839/99/சி1 நாள் 18.02.2000ன்படி மாதந்தோறும் ரூ.2000/– ஊதியத்தில் பணி நியமனம் செய்யப்பட்டு ஒரு வருடம் கழித்து அவரை காலமுறை ஊதியத்தில் கொண்டு வந்துள்ளனர். அன்னார் திரு.கோவிந்தராஜ் தற்போது துறையூர் நகராட்சியில் துப்புரவு மேற்பார்வையாளராக பணிபுரிகிறார். மேற்படி 3839/99/சி1 நாள் 18.02.2000 பணி நியமன ஆணை வரிசை எண்.11–ல் திரு.மனோகரன் என்பவருக்கு பணி நியமனம் வழங்கப்பட்டுள்ளது. அன்னார் பணி சேர்ந்த நாள் 01.04.1992 ஆம் வருடம் ஆகும். அவரும் 3 வருடம் 8 மாதம் பணிபுரிந்துள்ளார். அவருக்கு ரூ.2000/– தொகுப்பூதியத்தில் பணி நியமனம் செய்யப்பட்டு 18.02.2001ம் வருடம் பணி நிரந்தரம் செய்யப்பட்டுள்ளார் என்பதை பணிவுடன் தெரிவித்துக்கொள்கிறேன்.

அரசாணை எண்.125ன்படி 3839/99/சி1 நாள் 18.02.2000 தேதி பணி நியமன ஆணை வரிசை எண்.2ல் K.மனோகரன் பணியில் சேர்ந்த நாள் 03.02.1987ம் வருடம் நான் தினக்கூலியாக பணிபுரிந்தது 13 வருடங்கள். மேற்படி என்னை காலமுறை ஊதியத்தில் கொண்டு வருவதில் ஏன் இந்த பாரபட்சம், நிர்வாக தவறுதல் காரணமாக நான் மிகவும் பாதிக்கப்பட்டுள்ளேன். அய்யா கருணை கூர்ந்து இந்த மனுவை எனது கருணை மனுவாக ஏற்றுக்கொண்டு எனக்கு ஓய்வூதியம் வழங்க ஆணை வழங்குமாறு சிரம் தாழ்த்தி கரம் கூப்பி பணிவுடன் வேண்டி கேட்டுக்கொள்கிறேன்" என தெரிவித்துள்ளார்.

2. மனுதாரரின் புகார் மனு மீதான விரிவான அறிக்கை அனுப்புமாறு இம்முறைமன்ற நடுவ 30.08.2024 நாளிட்ட கடிதத்தில் துறையூர் நகராட்சி ஆணையாளர் கோரப்பட்டார்.

3. இந்நிலையில் மனுதாரர் மற்றும் எதிர்மனுதாரரான துறையூர் நகராட்சி ஆணையர் ஆகியோரை 18.09.2024 அன்று இம்முறைமன்ற நடுவத்தில் நடைபெறவிருக்கும் விசாரணைக்கு வருகை தந்து விளக்கம் அளிக்குமாறு 30.08.2024 நாளிட்ட அழைப்பாணைகள் அனுப்பப்பட்டன.

4. மனுதாரர் திரு.K.கணேசன் 18.09.2024 ம் தேதிய விசாரணையில் நேரடியாக ஆஜராகி கீழ்க்கண்டவாறு தனது வாக்குமூலத்தை சமர்ப்பித்துள்ளார்:

“நான் துறையூர் நகராட்சியில் 03.02.1987 முதல் தினக்கூலி பணியாளராக பணிபுரிந்து வந்துள்ளேன். அரசாணை எண்.125 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை நாள் 27.05.1999ன்படி நான் மின்கம்பி உதவியாளராக 18.02.2000 அன்று பணி நியமனம் செய்யப்பட்டேன். தினக்கூலி பணிக்காலம் 03.02.1987 முதல் 17.02.2000 வரை 13 வருடங்கள்அரசாணை125–ன்படி 18.02.2001 தேதியில் என்னை காலமுறை ஊதியத்தில் கொண்டுவர வேண்டும் அல்லது 18.02.2000 முதல் 3 வருடம் கழித்து 18.02.2003 தேதியில் காலமுறை ஊதியத்தில் கொண்டு வர வேண்டும். நிர்வாக தவறு காரணமாக 23.02.2006 தேதியில் பணி நிரந்தரம் செய்யப்பட்டேன். 01.04.2003 தேதிக்குப் பின் பணி நிரந்தரம் செய்யப்பட்டவர்களுக்கு ஓய்வூதியம் கிடையாது. மின் கம்பி உதவியாளர் பணியிடம் நானாக கேட்டு எனக்கு வழங்கப்படவில்லை. அலுவலகம் மூலமாக எனக்கு மின்கம்பியாளர் பணியிடம் வழங்கப்பட்டது. அதே சமயம் 3839/99/சி1 நாள். 18.02.2000 பணி நியமன ஆணையில் வரிசை எண்.12ல் திரு. கோவிந்தராஜ் என்பவருக்கு தூய்மை பணியாளர் பணியிடத்தில் பணிநியமனம் செய்யப்பட்டுள்ளார். அன்னார் தினக்கூலியாக பணியில் சேர்ந்த நாள் 01.10.1995 ஆகும். நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (நப3) துறை அரசாணை (நிலை) எண்.71 நாள் 05.05.1998.

நகராட்சிகளில் 31.12.1996 முடிய ஐந்து ஆண்டு முதல் 10 ஆண்டு வரை பணிபுரிந்துள்ள பதிலி துப்புரவு பணியாளர்களை நியமிக்கும் பட்சத்தில் மாதந்தோறும் ரூ.2000/– என்ற தொகுப்பூதியத்தில் நியமனம் செய்யப்படவேண்டும். நகராட்சிகளில் 31.12.1996 முடிய ஐந்து ஆண்டுகளுக்கு குறைவாக பணிபுரிந்துள்ள பதிலி துப்புரவு பணியாளர்கள் மற்றும் வேலை வாய்ப்பகம் மூலம் புதியதாக நியமிக்கப்பட்டவர்கள் மாதந்தோறும் ரூ.1500/– என்ற தொகுப்பூதியத்தில் நியமனம் செய்யப்பட வேண்டும்.

ந.க.எண்.3839/99/சி1 நாள். 18.02.2000–ன் பணிநியமன ஆணை வரிசை எண்.12ல் திரு.கோவிந்தராஜ் தினக்கூலியாக பணியில் சேர்ந்த நாள் 01.10.1995 ஆகும். மேலே கண்ட அரசாணை 71ன்படி (ii) நகராட்சிகளில் 31.12.1996 முடிய ஐந்து ஆண்டுகள் முதல் பத்து ஆண்டுகள் வரை பணிபுரிந்துள்ள துப்புரவு பணியாளர்களை மாதந்தோறும் ரூ.2000/– என்ற தொகுப்பூதியத்தில் நியமனம் செய்யப்படவேண்டும். திரு.கோவிந்தராஜ் 01.10.1995 முதல் 31.12.1996 வரை 1 வருடம் 2 மாதம் தான் பணிபுரிந்துள்ளார். ஆனால் திரு.கோவிந்தராஜ் அவர்களை 3839/99/சி1 நாள்.18.02.2000–ன்படி மாதந்தோறும் ரூ.2000/– ஊதியத்தில் பணி நியமனம் செய்யப்பட்டு ஒரு வருடம் கழித்து அவரை காலமுறை ஊதியத்தில் கொண்டு வந்துள்ளனர். தற்போது திரு.கோவிந்தராஜ் துறையூர் நகராட்சியில் துப்புரவு மேற்பார்வையாளராக பணிபுரிகிறார்.

மேலும் திரு.சி.மனோகரன் என்பவருக்கு 3839/99/சி1 நாள். 18.02.2000–ன் நியமன ஆணை வரிசை எண்.11–ல் பணிநியமனம் வழங்கப்பட்டுள்ளது. அன்னார் பணிசேர்ந்த நாள் 01.04.1992. அவர் 3 வருடம் 8 மாதம் பணிபுரிந்துள்ளார். அவருக்கு ரூ.2000/– தொகுப்பூதியத்தில்

பணிநியமனம் செய்யப்பட்டு 18.02.2001–ல் பணிநிரந்தரம் செய்யப்பட்டுள்ளார் என்பதையும், நான் 03.02.1987–ல் தினக்கூலியாக பணியில் சேர்ந்து 13 வருடங்கள் பணிபுரிந்த என்னை மட்டும் காலமுறை ஊதியத்தில் கொண்டு வருவதில் ஏன் இந்த பாரபட்சம் என்று தெரியவில்லை. நிர்வாக தவறுகள் காரணமாக நான் மிகவும் பாதிக்கப்பட்டுள்ளேன். ஆகவே என் மனுவினை நன்கு பரிசீலனைசெய்து எனக்கு நியாயம் கிடைக்க ஆவண செய்யுமாறு மாண்புமிகு முறைமன்ற நடுவர் அவர்களை கேட்டுக்கொள்கிறேன்.

நான் 18.09.2024 இன்றைய தினம் இம்முறைமன்ற நடுவத்தில் நேரில் ஆஜராகி கீழ்க்கண்ட எனது கோரிக்கைகளை முன் வைக்கிறேன்:

1) 03.02.1987 முதல் தினக்கூலியாக பணியில் சேர்ந்து 13 வருடங்கள் பணி புரிந்த என்னை மட்டும் காலமுறை ஊதியத்தில் கொண்டு வருவதில் துறையூர் நகராட்சி ஏன் இந்த பாரபட்சம் காட்டுகிறது என்று தெரியவில்லை. என்னையும் 2001–ல் காலமுறை ஊதியத்தில் கொண்டு வர உரிய நடவடிக்கையினை கோருகிறேன்.

2) துறையூர் நகராட்சி நிர்வாகத்தினரின் தவறுகள் காரணமாக நான் ஓய்வூதிய பணப் பலன்களில் மிகவும் பாதிக்கப்பட்டுள்ளேன். அவற்றினை களைந்து எனக்கு நியாயமான ஓய்வூதிய பணப்பலன்கள் கிடைக்க ஆவன செய்ய இம்முறைமன்ற நடுவத்தை கேட்டுக்கொள்கிறன்" என தெரிவித்துள்ளார்.

5) துறையூர் நகராட்சி ஆணையர் 18.09.2024 அன்றைய நேரடிய விசாரணையில் ஆஜராகி தனது வாக்குமூலத்தை கீழ்க்கண்டவாறு பதிவு செய்துள்ளார். நகராட்சிகளில் 01.10.1996க்கு முன்னர் பணி அமர்த்தப்பட்ட என்.எம்.ஆர்.பணியாளர்களை அவர்களின் தகுதிக்கேற்ப நகராட்சிகளில் உள்ள காலியிடங்களில் நியமனம் செய்திட அரசாணை 125 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்குதுறை நாள் 27.05.1999–ல் அறிவுறுத்தப்பட்டிருந்தது. மேலும் அதன்பின்னர் நகராட்சி நிர்வாக ஆணையர் மற்றும் அரசு கடிதங்களில் வழங்கப்பட்டுள்ள தெளிவுரைகளின்படி இந்நகராட்சியில் 01.10.1996க்கு முன் பணி அமர்த்தப்பட்டு என்எம்ஆர் பணியாளர்களாக தொடர்ந்து பணிபுரிந்து வந்த பணியாளர்களை அவர்களது கல்வி மற்றும் தொழில் கல்வி தகுதிகளை அடிப்படையாகக்கொண்டு தேர்வு செய்திட கூட்டப்பட்ட நியமனக்குழு தீர்மானம் எண்–1ல் குறிப்பிட்டுள்ள தீர்மானத்தில் 14 நபர்களை தொகுப்பூதிய அடிப்படையில் நியமனம் செய்து ஆணை வழங்கப்பட்டுள்ளது.

இந்த 14 நபர்களில் திரு.கே.கணேசன் த/பெ.திருஷ்ணசாமி என்பவரை தெருவிளக்கு பிரிவிற்கு புதிதாக அனுமதிக்கப்பட்ட மின்கம்பி உதவியாளர் பணியிடத்தில் தொகுப்பூதிய விகிதத்தில் நியமனம் செய்யப்பட்டது. அரசாணையில் தெரிவித்துள்ள நிபந்தனைகளின்படி 18.02.2000 முதல் தொடர்ந்து மூன்றாண்டு காலத்திற்கு மேல் தொகுப்பூதியத்தில் பணிபுரிந்து வருவதால், இவரை ஊதிய ஏற்ற முறையில் நியமணம் செய்ய ஆணை வேண்டி நகராட்சி நிர்வாக இயக்குநருக்கு கருத்துரு சமர்ப்பிக்கப்பட்டு உத்தரவு எதிர்பார்க்கப்பட்டு வந்தது. இந்நிலையில் அரசு ஆணை (பல்வகை) எண்.212 (P&AR) துறை நாள் 29.11.2001–ல் எந்தவித காலி பணியிடங்களில் பணியமர்த்த தடையாணை பிறப்பிக்கப்பட்டது. இதனால் தினக்கூலி பணியாளர்களுக்கு காலமுறை ஊதியம் நிர்ணயம் செய்திட உத்தரவு எதுவும் பிறப்பிக்கப்படவில்லை. இதற்கு பிறகு 07.02.2006–ல் அரசாணை எண்.14/P&AR (P) துறை மூலம் தடையாணை விலக்கப்பட்டதால் அரசாணை (நிலை) எண்.21 நநிமகுவதுறை நாள்

23.02.2006–ன்படி மின்கம்பி உதவியாளர் பணியிடத்தில் காலமுறை ஊதியம் வழங்கி பணி வரன்முறைப்படுத்தி ஆணை வழங்கப்பட்டது. இந்நிலையில் பணியாளர் பணிபுரிந்து 31.05.2017 அன்று ஒய்வு பெற்றதால் ஓய்வூதிய பயன்கள் வழங்க கோரி கருத்துரு இயக்குநர், உள்ளாட்சி நிதி தணிக்கை, சென்னை அவர்களுக்கு 05.09.2018–ல் கடிதம் அனுப்பி வைக்கப்பட்டது. இக்கடிதத்திற்கு இயக்குநர், உள்ளாட்சி நிதி தணிக்கை துறையிலிருந்து தனியரது பணி 01.04.2003க்கு பின்னர் 23.02.2006ல் பணிவரன்முறைப்படுத்தப்பட்டுள்ள நிலையில் ஒய்வூதியப்பயன்கள் அனுமதிக்க உரிய அத்தாட்சியுடன் பரிந்துரை செய்ய தெரிவித்து பெறப்பட்ட பணிப்பதிவேடு மற்றும் முன்மொழிவு அசலாக திரும்ப பெறப்பட்டது என்ற விவரம் இம்முறைமன்ற நடுவத்திற்கு சமர்ப்பிக்கப்படுகிறது.

1) மனுதாரர் கோரியுள்ளபடி 2001 முதல் அவருக்கு பணிவரன்முறை செய்யப்பட்டு, ஒய்வூதியப்பணப்பலன்கள் கிடைத்திட, மறு ஆய்வு செய்து அதற்குரிய கருத்துருவினை நகராட்சி ஆணையரகத்திற்கு விரைவில் அனுப்பி வைக்க நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை இம்முறைமன்ற நடுவத்தில் தெரிவித்துக்கொள்கிறேன்.

2) மேலும் இம்முறைமன்ற நடுவம் அளித்துள்ள கால அவகாசத்தை முன்னிறுத்தி, இக்கோப்பில் அரசு விதிமுறைகளுக்குட்பட்டு மனுதாரர் மனு மீது கூர்ந்தாய்வு செய்து தீர்வு செய்ய அறிவுறுத்தியதனடிப்படையில் உரிய நடவடிக்கையினை மேற்கொள்ளப்படும் என்பதை இம்முறைமன்ற நடுவத்தில் தெரிவித்துக்கொள்கிறேன்" என தெரிவித்துள்ளார்.

3) துறையூர் நகராட்சி ஆணையர் தனது 09.10.2024 நாளிட்ட அறிக்கையில் கீழ்க்கண்டவாறு தெரிவித்துள்ளார்:

நகராட்சிகளில் 01.10.1996–க்கு முன்னர் பணி அமர்த்தப்பட்ட என்.எம்.ஆர். பணியாளர்களை அவரவர்களின் தகுதிக்கேற்ப நகராட்சிகளில் உள்ள காலியிடங்களில் நியமனம் செய்திட அரசாணை (நிலை) எண்.125 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்குதுறை நாள் 27.05.1999–ல் பல்வேறு பிரிவுகளில் பணிபுரிந்து வரும் தினக்கூலி பணியாளர்களை அவரவர் கல்வித் தகுதிக்கேற்ப நகராட்சிகளில் காலியாக உள்ள பணியிடங்களில் தொகுப்பூதிய அடிப்படையில் பணி நியமனம் செய்திட உத்திரவிடப்பட்டதை தொடர்ந்து. இந்நகராட்சியில் பணிபுரிந்து வந்த தினக்கூலி பணியாளர்களை தொகுப்பூதிய அடிப்படையில் பணி நியமனம் செய்திட முன்னுரிமை பட்டியல் தயார் செய்யப்பட்டது. அதன் அடிப்படையில் முன்னுரிமைப் பட்டியலில் வ.எண்.2–ல் இடம் பெற்றுள்ள திரு.கி.கணேசன் என்பவர் தினக்கூலி பணியாளராக 03.02.1987 அன்று பணியில் சேர்ந்துள்ளார். பார்வை 5ல் காணும் நியமனக்குழு தீர்மானத்தின்படி அன்னாரது கல்வித் தகுதி 8ம் வகுப்பு தேர்ச்சி என பதிவு செய்யப்பட்டுள்ளது.

மேலும் தயாரிக்கப்பட்ட முன்னுரிமை பட்டியலின் அடிப்படையில் நியமனக்குழு தீர்மானம் எண்.1 நாள் 17.02.2000 அன்று தீர்மானம் நிறைவேற்றப்பட்டு இந்நகராட்சியில் உள்ள 13 தினக்கூலி பணியாளர்களையும் தொகுப்பூதிய அடிப்படையில் அவரவர் கல்வி தகுதிக்கேற்ப பணி நியமனம் செய்யப்பட்டது.

| வ. எண். | பெயர் | நியமனம் செய்யப்பட்ட பணியிடம் விபரம் | தொகுப் பூதியம் ரூ. | பணியிடம் காலியாக இருந்த விவரம் / பணியிடம் அனுமதிக்கப்பட்ட விபரம் |
|---|---|---|---|---|
| 1 | திரு.து.கேசவன் த/பெ.துரைராஜ் | இளநிலை உதவியாளர் (எப்2) | 2000 | என்.ஆர்.ஒய் திட்டத்திற்கு அனுமதிக்கப் பட்ட இளநிலை உதவியாளர் பணியிடம் |

| | | | | |
|---|---|---|---|---|
| 2 | திரு.கே.கணேசன் த/பெ.கிருஷ்ணசாமி | மின் கம்பியாளர் | 2000 | தெருவிளக்கு பிரிவிற்கு புதிதாக அனுமதிக்கப்பட்ட பணியிடம். |
| 3 | திரு.எஸ்.இராஜேந்திரன், த/பெ.சுப்பன் | தூய்மை பணியாளர் | 2000 | 01.10.1999–ல் திரு.ஆர்.பெருமாள் துப்பரவு பணியாளர் ஓய்வு பெற்றதால் ஏற்பட்ட காலியிடம். |
| 4 | திரு. சி.ராஜா த/பெ.சித்தி | தூய்மை பணியாளர் | 2000 | தொகுப்பூதியத்தில் அனுமதிக்கப்பட்ட துப்பரவு பணியாளர் பணியிடம் |
| 5 | திரு.ந.ஹரிதாஸ் த/பெ.நடேசன் | தூய்மை பணியாளர் | 2000 | தொகுப்பூதியத்தில் அனுமதிக்கப்பட்ட துப்பரவு பணியாளர் பணியிடம் |
| 6 | திரு.தா.நீலமோகன் த/பெ. தாமோதரன் | பொருத்துனர் | 2000 | ஏற்கனவே காலியாக இருந்த பணியிடம் |
| 7 | திரு.இராஜமணவாளன் த/பெ.கணேசன் | இளநிலை உதவியாளர் (சி1) | 2000 | பா.சுரேஷ்குமார், இளநிலை உதவியாளர் பதவி உயர்வினால் ஏற்பட்ட பணியிடம் |
| 8 | திருமதி.சே.தனலட்சுமி த/பெ.சேஷப்பிள்ளை | தட்டச்சர் | 2000 | திருமதி.என்.செல்வராணி, தட்டச்சர் பதவி உயர்வினால் ஏற்பட்ட பணியிடம். |
| 9 | திரு.செ.சண்முகம் த/பெ.செங்கமலம் | லாரி கிளீனர் | 2000 | திரு.மனோகரன் லாரி துலக்குனர் பதவி உயர்வினால் ஏற்பட்ட பணியிடம். |
| 10 | திரு.வெ.ஜெயக்குமார் த.பெ.வெங்கடேசன் | இளநிலை உதவியாளர் (பி2) | 2000 | செல்வி.ஆர். தமிழ்செல்வி இளநிலை உதவியாளர் பதவி உயர்வினால் ஏற்பட்ட பணியிடம். |
| 11 | திரு.ரா.மனோகரன், த/பெ. ராசாமணி | தூய்மை பணியாளர் | 2000 | தொகுப்பூதியத்தில் அனுமதிக்கப்பட்ட துப்பரவு பணியாளர் பணியிடம் |
| 12 | திரு. பெ.கோவிந்தராஜ், த/பெ. பெரியசாமி | தூய்மை பணியாளர் | 2000 | தொகுப்பூதியத்தில் அனுமதிக்கப்பட்ட துப்பரவு பணியாளர் பணியிடம். |
| 13 | திரு.நா.ஞானசேகர் த/பெ.நாராயணன் | ஓட்டுனர் | 2000 | அடிப்படை வசதி திட்டம் கீழ் வழங்கப்பட்ட மினி லாரிக்கு அனுமதிக்கப் பட்ட பணியிடம். |

பார்வை 6–ல் காணும் இவ்வலுவலக செயல்முறை ஆணை ந.க.எண்.3839/99/சி1 நாள் 18.02.2000 ன்படி மேற்கண்ட 13 தினக்கூலி பணியாளர்களுக்கு வழங்கப்பட்ட பணி நியமன உத்தரவில் வ.எண்.2–ல் இடம்பெற்றுள்ள திரு.கி.கணேசன் என்பவருக்கு தெருவிளக்கு பிரிவில் புதியதாக அனுதிக்கப்பட்ட பணியிடத்தில் பணி நியமனம் செய்யப்பட்டார்.

சம்பந்தப்பட்ட பணியாளர்களுக்கு நியமனம் செய்யப்பட்ட தேதியிலிருந்து ஒரு வருடத்திற்கு ரூ.2000/– தொகுப்பூதியம் வழங்கப்படும் எனவும், ஒரு வருடம் முடிவடைந்ததும் சம்மந்தப்பட்ட பணியாளர்களுக்குரிய ஊதிய ஏற்ற முறையில் ஊதியம் நிர்ணயம் செய்து வழங்கப்படும். பார்வை 5–ல் காணும் இவ்வலுவலக செயல்முறை ஆணை நாள்18.02.2000–ல் தனியர்களுக்கு ஆணை வழங்கப்பட்டது.

இப்பணியாளர்களில் திரு. கே.கணேசன், மின்கம்பி உதவியாளர் என்பவருக்கு வழங்கப்பட்ட புதிய பணியிடமானது நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களின் செயல்முறை உத்திரவு மூ.மு.எண்.83367/98/எப்5 நாள் 09.11.1999–ல் துறையூர் நகராட்சிக்கு, ஒரு மின்கம்பி உதவியாளர் பணியிடம் தோற்றுவித்துக்கொள்ளவும், அவற்றை தகுதி வாய்ந்த தினக்கூலி பணியாளரை கொண்டு நிரப்பிக்கொள்ளவும் உத்திரவிடப்பட்டது.

இப்பணியிடம் அரசாணை (நிலை) எண்.70 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கு (நப3) துறை நாள் 05.05.1998ன்படி தோற்றுவிக்கப்பட்ட பணியிடமாகும். இப்பணியில் புதிதாக நியமனம் செய்யப்படும் உதவியாளர் (Helper) மாதம் ரூ.1700/– என்ற தொகுப்பூதியத்தில் நியமனம்

செய்யப்பட வேண்டும் எனவும், இத்தொகுப்பூதியம் ஒவ்வொரு ஆண்டும் 5 சதவிகிதம் கூடுதலாக்கப்படும் எனவும், இந்நியமனத்தை புதுப்பித்து தொடர்ந்து மூன்றாண்டுகளுக்கு நியமனம் செய்யப்பட வேண்டும் எனவும், மூன்று ஆண்டுகளுக்குப் பின்னர் இப்பணியாளர்களின் செயலாக்கத்தை மதிப்பீடு செய்து இவர்களை ஊதிய ஏற்ற முறையில் நியமனம் செய்யப்பட வேண்டுமா என்பது குறித்து அரசு பரிசீலித்து ஆணையரும் இவ்வலுவலக கடிதம் ந.க.எண்.3839/99/சி1 நாள் 09.10.2006ல் தெரிவிக்கப்பட்டுள்ளதால் மின்கம்பி உதவியாளர் திரு.கி.கணேசன் என்பவருக்கு மேற்கண்ட அரசாணையில் தெரிவித்துள்ளவாறு மாதம் ரூ,1700/– என்ற தொகுப்பூதிய அடிப்படையில் நிர்ணயம் செய்யப்பட்டு ஒவ்வொரு வருடமும் 5 சதவிகிதம் உயர்த்தி 3 ஆண்டுகளுக்கு தொகுப்பூதிய அடிப்படையில் வழங்கப்பட்டது.

மேற்கண்ட மின்கம்பி உதவியாளர் பணியிடம் தொடர்பாக நகராட்சி நிர்வாக ஆணையரக கண்காணிப்பு பொறியாளர், சென்னை அவர்களின் கடிதம் ந.க.எண்.2198/2002/எப்3 நாள் 25.01.2002ன் கடிதத்தில் அரசாணை எண்.70 நநிமகுவ துறை நாள் 05.05.1998ல் தெரிவித்துள்ள அளவுகோல்களின்படி, தோற்றுவிக்கப்பட்ட மின்கம்பி உதவியாளர் பணியிடங்களை ஆண்டுதோறும் புதுப்பிக்க தெரிவிக்கப்பட்டதற்கு இணங்க இறுதியாக இப்பணியிடம் நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னைஅவர்களின் செயல்முறை ஆணை ந.க.எண்.5436/எப்3/2009 நாள் 03.12.2013–ல் 30.09.2013 வரை கால நீட்டிப்பிற்கான அனுமதி பெறப்பட்டுள்ளது.

இதன் பின்னர் தெருவிளக்கு பராமரிப்பு மின்கம்பி உதவியாளர் திரு.கே.கணேசனுக்கு மாதாந்திர தொகுப்பூதியம் ரூ.2000/–க்கு பதிலாக ரூ.1700/– மட்டுமே அனுமதிக்கப்பட்டுள்ளதால் மற்ற தினக்கூலி பணியாளர்களுக்கு ரூ.2000/– அனுமதிக்கப்பட்டது போல் தொகுப்பூதியம் வழங்குவதில் வேறுபாடுகளை களைந்து உரிய அனுமதி கோரி பார்வை 6ல் காணும் இவ்வலுவலக கடிதம் மூலம் நகராட்சி நிர்வாக ஆணையரிடம் கோரப்பட்டது.

மின்கம்பி உதவியாளர் தொகுப்பூதியத்தில் நியமனம் செய்யப்பட்டது. தொகுப்பூதியம் வழங்குவதில் வேறுபாடுகளை களைந்து அனுப்பப்பட்ட மனுவுடன் கூடுதலாக புதிய பணியிடம் தோற்றுவிக்கப்பட்ட ஆணை மற்றும் தொகுப்பூதியத்தில் நியமனம் செய்து செயல்முறை ஆணை ஆகியவற்றின் நகல் அனுப்பிட பார்வை 7ல் காணும் நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர், தஞ்சாவூர் அவர்களின் கடிதத்தில் தெரிவிக்கப்பட்ட குறைபாட்டினை களைந்து மேற்கண்ட ஆணைகளை இணைத்து பார்வை 6ல் காணும் இவ்வலுவலக கடிதம் ந.க.எண்.3839/2000/சி1 நாள் 06.11.2000–ல் கடிதம் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. அதன் பின் பார்வை 8ல் காணும் நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர், தஞ்சாவூர் அவர்களால் நகராட்சி நிர்வாக ஆணையர் சென்னை அவர்களுக்கு உரிய ஆணைக்காக பரிந்துரை செய்யப்பட்டது.

இந்நகராட்சியில் 01.10.1996க்கு முன்னர் பணியமர்த்தப்பட்ட மொத்தம் 13 தினக்கூலிப் பணியாளர்களை அரசாணை (நிலை) எண்.125 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கு (நப3) துறை நாள் 27.05.1999ன்படி முறையான பணியிடத்தில் அவரவர் கல்வித்தகுதிக்கேற்ப பணியமர்த்தப்பட்டனர் என்றும் அவர்களில் 7 நபர்களை அரசு கடிதம் எண்.29251/நப3/99–1 நாள் 14.01.2000ன்படி தினக்கூலி பணியாளர்களைக் கொண்டு காலியிடங்களை நிரப்பப்படும்போது தேவைப்பட்டால் அவர்களுக்கு கல்வித்தகுதி மற்றும் வயது வரம்பு விதிகளை தளர்த்தி உத்திரவிடலாம் என்று குறிப்பிட்டுள்ளபடி நியமனம் செய்யப்பட்டுள்ளனர் என தெரிவித்து கீழ்க்கண்ட பணியாளர்களுக்கு வயதுவரம்பினை தளர்த்தி பணி வழங்கியமைக்கு அனுமதி கோரி

கருத்துரு நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர், தஞ்சாவூர் அலுவலகம் மூலம் கடிதம் அனுப்பி வைக்கப்பட்டதை நகராட்சி நிர்வாக ஆணையரகத்திற்கு பரிந்துரை செய்யப்பட்டுள்ளது.

| வ. எண். | பெயர் மற்றும் பதவி | பிறந்த தேதி | தினக்கூலியாக பணி அமர்த்தப்பட்ட நாள் | இனம் | வயது வரம்பு | அப்போதைய வயது (18.02.2000) அன்றைய நிலவரப்படி |
|---|---|---|---|---|---|---|
| 1 | திரு.டி.கேசவன் இளநிலை உதவியாளர் | 19.09.58 | 07.05.82 | பி.வ. | 30 | 42 |
| 2 | திரு.எஸ்.சண்முகம்ஓட்டுனர் | 12.05.64 | 01.04.92 | பி.வ. | 30 | 36 |
| 3 | திரு.ந.ஞானசேகர், ஓட்டுனர் | 15.05.66 | 01.03.96 | பி.வ. | 30 | 34 |
| 4 | திரு. தா.நீலமோகன், குழாய் பொருத்துனர் | 01.06.65 | 01.07.87 | பி.வ. | 30 | 35 |
| 5 | திரு.வி.ஜெயக்குமார், அலுவலக உதவியாளர் | 05.04.65 | 01.04.92 | மிபிவ | 32 | 35 |
| 6 | திரு.அ.கருணாநிதி , துலக்குநர் | 25.04.52 | 01.11.95 | தா.வ | 35 | 48 |
| 7 | திரு.கே.கணேசன் மின்கம்பி உதவியாளர் | 20.05.57 | 03.02.87 | பி.வ | 30 | 43 |

பணி நிரந்தரம் செய்யப்பட்ட கீழ்க்காணும் நபர்களுக்கு காலமுறை ஊதியத்திற்கு கொண்டு வர கருத்துரு நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர், தஞ்சாவூர் வழியாக நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டது.

1 து.கேசவன், இளநிலை உதவியாளர்
2 திரு. எஸ்.ராஜேந்திரன், தூய்மை பணியாளர்
3 திரு.சி.ராஜா, தூய்மை பணியாளர்
4 திரு.ந.ஹரிதாஸ், தூய்மை பணியாளர்
5 திரு.நா.நீலமோகன், குழாய் பொருத்துனர்
6 திரு.க.இராஜமணவாளன், இளநிலை உதவியாளர்
7 திரு.ரா.மனோகரன், தூய்மை பணியாளர்
8 திருமதி. சே.தனலட்சுமி, இளநிலை உதவியாளர்
9 திரு.பெ.கோவிந்தராஜு, தூய்மை பணியாளர்
10 திரு.ந.ஞானசேகரன், ஓட்டுனர்

மேற்கண்ட கருத்துருவில் அனுப்பி வைக்கப்பட்ட 10 நபர்களில் 5 தொகுப்பூதிய தூய்மை பணியாளர்களுக்கும் ஒரு ஓட்டுனருக்கும் காலமுறை ஊதிய விகிதத்தில் நியமனம் செய்து கொள்ள நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களின் செயல்முறை ஆணை ந.க.எண்.51594/2001/ஜே3 நாள் 15.10.2001–ல் அனுமதி ஆணை வழங்கப்பட்டது. மீதமுள்ள 4 நபர்களுக்கு அனுமதி வழங்கப்படாத நிலையில் கீழ்க்கண்ட 3 நபர்களுக்கு பணி நிரந்தரம் செய்து காலமுறை ஊதியம் வழங்கி நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களின் செயல்முறை ஆணை ந.க.எண்.54634/2001/கே2 நாள் 22.10.2001–ல் அனுமதி வழங்கப்பட்டது.

1 து.கேசவன், இளநிலை உதவியாளர்
2 திரு. க. இராஜமணவாளன், இளநிலை உதவியாளர்
3 திருமதி. சே.தனலட்சுமி, இளநிலை உதவியாளர்

மேற்கண்ட நபர்களில் திரு.தா.நீலமோகன், குழாய் பொருத்துநர் என்பவருக்கு மட்டும் காலமுறை ஊதியம் வழங்கிட அனுமதி ஆணை பெறப்படவில்லை. எனவே, திரு.தா.நீலமோகன் குழாய் பொருத்துனருக்கு காலமுறை ஊதியம் வழங்கிட உரிய உத்திரவு ந.க.எண்.3839/99/சி1 நாள் 21.12.2001 மற்றும் 31.01.2003 களில் நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களுக்கு கடிதம் அனுப்பி வைக்கப்பட்டு ஆணை பெறப்படாததால் அரசாணை நிலை எண்.21 நநிமகுவ(நப3) துறை நாள் 23.02.2006–ல் பணிவரன்முறைபடுத்தி ஊதிய ஏற்ற முறை ஊதிய விகிதத்தில் நியமனம் செய்து ஆணை வழங்கப்பட்டது.

மேற்கண்ட 13 நபர்களில் திரு.வெ.ஜெயக்குமார் என்பவர் அலுவலக உதவியாளராக தொகுப்பூதியத்தில் பணிபுரிந்து 31.07.2021–ல் ஓராண்டு காலம் முடிவடைந்ததால் தனியருக்கு பார்வை 9 ல் காணும் நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களின் கடிதம் ந.க.எண்.78299/2001/கே2 நாள் 03.02.2002–ல் அனுமதி வழங்கி ஆணை பிறப்பிக்கப்பட்டுள்ளது.

இந்த 13 நபர்களில் திரு.கே.கணேசன் த/பெ.கிருஷ்ணசாமி, என்பவரை தெருவிளக்கு பிரிவிற்கு நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களின் செயல்முறை ஆணை மூ.மு.83367/98/எப்3 நாள் 09.11.1999 –ல் புதிதாக அனுமதிக்கப்பட்ட மின்கம்பி உதவியாளர் பணியிடத்தில் அரசாணை எண்.70 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கு (நப3) துறை நாள் 05.05.1998–ல் தெருவிளக்கு பராமரிப்பிற்கான பணியிடங்களுக்கு அளவுகோல் நிர்ணயம் செய்து வழங்கியுள்ளவாறு ரூ.1700/– என்ற தொகுப்பூதியத்தில் நிர்ணயம் செய்யப்பட்டது.

அரசாணையில் தெரிவித்துள்ள நிபந்தனைகளின்படி தனியர் 18.02.2000 முதல் தொடர்ந்து மூன்றாண்டு காலத்திற்கு மேல் தொகுப்பூதியத்தில் பணிபுரிந்து வந்த நிலையில் தனியரை ஊதிய ஏற்ற முறையில் பணி நியமனம் செய்ய உத்திரவு வேண்டி நகராட்சி நிர்வாக ஆணையருக்கு கருத்துரு சமர்பிக்கப்பட்டு உத்திரவு எதிர்பார்க்கப்பட்டு வந்தது.

அரசு ஆணை (பல்வகை) எண்.212 (P&AR) துறை நாள் 29.11.2001–ல் எந்த வித காலி பணியிடங்களில் பணியமர்த்த தடையாணை பிறப்பிக்கப்பட்டது. இதனால் தினக்கூலி பணியாளர்களுக்கு காலமுறை ஊதியம் நிர்ணயம் செய்திட உத்திரவு எதுவும் பிறப்பிக்கப்படவில்லை.

மேலும் 07.02.2006–ல் அரசாணை எண்.14/(P & AR)(P) துறை மூலம் தடையாணை விலக்கப்பட்டதால் அரசாணை (நிலை) எண்.21 (நதிமகுவ) துறை நாள் 23.02.2006ன்படி மின்கம்பி உதவியாளர் பணியிடத்தில் காலமுறை ஊதியம் வழங்கி பணிவரன்முறைப்படுத்தி ஆணை வழங்கப்பட்டுள்ளது.

இந்நிலையில் பணியாளர் வயது முதிர்வின் காரணமாக 31.05.2017 அன்று ஓய்வு பெற்றதால் ஓய்வூதியப் பயன்கள் வழங்க கோரி மனுதாரரின் விண்ணப்பத்தின் அடிப்படையில் கருத்துரு இயக்குநர் உள்ளாட்சி நிதி தணிக்கை, சென்னை அவர்களுக்கு 05.09.2018–ல் கடிதம் அனுப்பி வைக்கப்பட்டது.

இக்கடிதத்திற்கு இயக்குநர் உள்ளாட்சி நிதி தணிக்கை துறையிலிருந்து தனியரது பணி 01.04.2003க்கு பின்னர் 23.02.2006ல் பணிவரன்முறைப் படுத்தப்பட்டுள்ள நிலையில் ஓய்வூதியப் பயன்கள் அனுமதிக்க உரிய அத்தாட்சியுடன் பரிந்துரை செய்ய தெரிவித்து பெறப்பட்ட பணிப்பதிவேடு மற்றும் முன்மொழிவு அசலாக திரும்ப பெறப்பட்டது என்ற விபரம் சமர்ப்பிக்கப்படுகிறது.

இதன் பின்னர் தனியரால் சென்னை உயர்நீதிமன்ற கிளையில் W.P.No.10403/2019 –ல் ஓய்வூதியம் வழங்க கோரி வழக்கு தொடர்ந்து வழக்கின் தீர்ப்பு கீழ்க்கண்டவாறு பெறப்பட்டுள்ளது.

This being the dictum of the Hon'ble Apex Court, now the High Court does not grant regularization in respect of the appointments made in violation of recruitment rules in force. Admittedly, the initial appointment of the writ petitioner in the present post was not in accordance with the recruitment rules and the benefits of regularization was already granted by proceedings dated 01.03.2006 and the service of the writ petitioner was already regularized and he is working in the sanctioned post in the regular time scale of pay. This being the concession already extended to the writ petitioner, he cannot expect any further concession either from the Government or from the High Court. Hence the writ petition stands dismissed. No costs. consequently connected Miscellaneous Petition is closed.

நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களின் செயல்முறை ஆணை ந.க.எண்.95478/99/ஜே3 நாள் 07.02.2000–ன்படி 1999–2000ம் ஆண்டு அடிப்படை வசதி திட்டத்தின் கீழ் பொது சுகாதாரப்பிரிவிற்கு வாங்கப்பட்ட லாரி ஒன்றுக்கு ஓட்டுனர் பணியிடம் தோற்றுவித்துக்கொள்ள துறையூர் நகராட்சி ஆணையருக்கு அனுமதி அளிக்கப்பட்டு அரசாணை எண்.21 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கு துறை நாள் 02.03.98 மற்றும் 125 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கு துறை நாள் 27.05.99 மற்றும் அரசு கடித எண்.29251/3U3/99–1 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கு துறை நாள் 14.01.2000–ல் தெரிவித்துள்ள விதிகளின்படி ஓட்டுனர் பணியிடத்தை பூர்த்தி செய்து கொள்ள அனுமதி அளிக்கப்பட்டதால் தினக்கூலி பணியாளரான திரு.செ.சண்முகம் என்பவரை ஓட்டுனராகவும், திரு.ஆ.கருணாநிதி என்பவரை ஏற்கனவே காலியாக உள்ள லாரி துலக்குநர் பணியிடத்தில் தொகுப்பூதியத்தில் பணி நியமனம் செய்யப்பட்டது. இப்பணியாளர்களுக்கும் ஓராண்டு காலம் பணி நிறைவுற்றதும் காலமுறை ஊதியத்திற்கு கொண்டுவர இவ்வலுவலக கடிதம் ந.க.எண்.1125/2000/எச்1 நாள் 13.12.2001, 28.10.2002, 15.07.2003, 26.02.2004, 29.09.2005, 04.01.2006 ன் வழியாக கடிதம் அனுப்பி வைக்கப்பட்டு உரிய ஆணை பெறப்படாததால் மேற்கண்ட இரு நபர்களுக்கும் அரசாணை (நிலை) எண். 21 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கு துறை (நப3) நாள் 23.02.2006ன்படி தொகுப்பூதியத்தில் இருந்து கால முறை ஊதிய விகிதத்திற்கு கொண்டு வந்து பணிவரன்முறை செய்யப்பட்டது.

எனவே அரசாணை (நிலை) எண்.125 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கு (நப3) துறை நாள் 27.05.99 மற்றும் அரசாணை (நிலை) எண்.70 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கு (நப3) துறை நாள் 05.05.1998ல் தெரிவிக்கப்பட்டுள்ள அளவுகோலின்படி தொகுப்பூதிய அடிப்படையில் நியமனம் செய்யப்பட்ட திரு.கே. கணேசன், மின்கம்பி உதவியாளர் (ஓய்வு), திரு.செ.சண்முகம், ஓட்டுனர் (ஓய்வு) திரு.தா.நீலமோகன், குழாய் துலக்குநர் ஆகியோருக்கு காலமுறை ஊதிய விகிதத்திற்கு கொண்டு வரப்படவில்லை,

இந்நிலையில் திரு.கி.கணேசன், மின்கம்பி உதவியாளர் (ஓய்வு) என்பவர் தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறை மன்ற நடுவர் அவர்களிடம் 08.08.2024–ல் முறையிட்டு, முறையீட்டு மனு சம்மந்தமாக விசாரணை தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவத்தில் 18.09.2024 அன்று ஆணையர் கலந்து கொள்ள முறையீட்டு மனு எண்.120/ந/2024 நாள் 30.08.2024–ல் கடிதம் பெறப்பட்டது. இக்கடிதத்தின்படி 18.09.2024 அன்று ஆணையர் அவர்களால் கலந்து கொள்ளப்பட்டது. இம்மனு தொடர்பாக தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறை மன்ற நடுவர் நீதி மன்றத்தில் நடுவர் அவர்களால் மேற்கண்ட மனுவினை கூர்ந்தாய்வு செய்து மறு பரிசீலனை செய்து நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களுக்கு பரிந்துரை செய்ய தெரிவிக்கப்பட்டது. மேலும் தொகுப்பூதிய அடிப்படையில் அரசாணை (நிலை) எண்.125 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கு (நப3) துறை நாள் 27.05.1999–ல் நியமனம் செய்யப்பட்ட திரு.கே.கணேசன், மின்கம்பி உதவியாளர் (ஓய்வு), என்பவருடைய நிலை போலவே இந்நகராட்சியில் மற்ற சிலரான திருசெ.சண்முகம், ஓட்டுனர் (ஓய்வு), திரு.ஆ.கருணாநிதி, லாரி துலக்குநர் (ஓய்வு), திரு.தா.நீலமோகன், குழாய் துலக்குநர் ஆகியோருக்கு காலமுறை ஊதிய விகிதத்திற்கு கொண்டு வரப்படவில்லை.

எனவே முறை மன்ற நடுவத்தால் தெரிவிக்கப்பட்டபடி பணியாளர் தொடர்பான விபரங்களை கலந்தாய்வு செய்தும், அரசாணை (நிலை) எண்.125 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கு (நப3) துறை நாள் 27.05.99 மற்றும் அரசாணை (நிலை) எண்.70 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழக்கு (நப3) துறை நாள் 05.05.1998–ல் தெரிவிக்கப்பட்டுள்ள அளவுகோலின்படி தொகுப்பூதிய அடிப்படையில் நியமனம் செய்யப்பட்ட திரு.கி.கணேசன், மின்கம்பி உதவியாளர் (ஓய்வு) திரு.செ.சண்முகம், ஓட்டுனர் (ஓய்வு) திரு.ஆ.கருணாநிதி லாரி துலக்குநர் (ஓய்வு) திரு.தா.நீலமோகன், குழாய் பொருத்துனர் ஆகியோருக்கு மேற்கண்ட இப்பொருள் தொடர்பாக முறைமன்ற நடுவர் அவர்களால் தெரிவிக்கப்பட்டுள்ளவாறு மறுபரிசீலனை செய்து உரிய ஆணை வழங்கிட பரிந்துரை செய்யப்படுகிறது" என தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து இம்முறைமன்ற நடுவ கடித எண்.771/ந/2024 நாள்.20.11.2024–ல், மனுதாரரின் தகுதியின் அடிப்படையில் மட்டுமே அவரது கோரிக்கை குறித்த கருத்துருவினை நகராட்சி நிர்வாக இயக்குநரகத்திற்கு அனுப்பி வைக்க இம்முறைமன்ற நடுவத்தால் தெரிவிக்கப்பட்டுள்ளது என குறிப்பிட்டு கடிதம் அனுப்பப்பட்டுள்ளது.

6) மனுதாரரின் புகார் மனு மற்றும் மனுவுடன் இணைத்தனுப்பப்பட்ட ஆவணங்கள் மற்றும் மனுதாரரின் வாக்குமூலம், மயிலாடுதுறை நகராட்சி ஆணையரின் வாக்குமூலம், அறிக்கை மற்றும் ஆவணங்கள், ஆகிய அனைத்தும் இம்முறைமன்ற நடுவத்தினால் மிகக் கவனமுடன் பரிசீலிக்கப்பட்டு கீழ்க்கண்ட விவரங்கள் கண்டறியப்பட்டன:-

மனுதாரர் தான் துறையூர் நகராட்சியில் 03.02.1987 முதல் தினக்கூலி பணியாளராக பணிபுரிந்து வந்துள்ளதாகவும், ந.க.எண்.3839/99/சி.1 நாள் 18.02.2000 அரசாணை எண்.125 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை நாள் 27.05.1999. மேற்படி அரசாணையின்படி மின் கம்பி உதவியாளராக பணி நியமனம் செய்யப்பட்டதாகவும், தினக்கூலி பணிக்காலம் 03.02.1987 முதல் 17.02.2000 வரை 13 வருடங்கள் (பதிமூன்று வருடங்கள்) பணி செய்த தன்னை அரசாணை 125ன்படி 18.02.2001 தேதியில் தன்னை காலமுறை ஊதியத்தில் கொண்டு வர வேண்டும் எனவும் அல்லது 18.02.2000 முதல் 3 வருடம் (மூன்று வருடம்) கழித்து 18.02.2003 தேதியில் காலமுறை ஊதியத்தில் கொண்டு வர வேண்டும். நிர்வாக தவறு காரணமாக 23.02.2006 தேதியில் பணி நிரந்தரம் செய்யப்பட்டதாகவும், ஆகவே தனக்கு ஓய்வூதியப்பணப்பலன்கள் கிடைக்கப் பெறவில்லை என தெரிவித்து தனக்கு ஓய்வூதிய பணப்பலன்கள் கிடைப்பதற்கு ஆவன செய்யுமாறு இம்முறைமன்ற நடுவத்தை கோரியுள்ளார்.

மனுதாரர் கோரியுள்ளபடி 2001 முதல் அவருக்கு பணி வரன்முறை செய்யப்பட்டு ஓய்வூதியப்பணப்பலன்கள் கிடைத்திட மறு ஆய்வு செய்து அதற்குரிய கருத்துருவினை உரிய நகராட்சி ஆணையரகத்திற்கு விரைவில் அனுப்பி வைக்க நடவடிக்கை எடுக்கப்படும் என்று நகராட்சி ஆணையர் தனது வாக்குமூலத்தில் தெரிவித்துள்ள நிலையில், 09.10.2024 நாளிட்ட கடிதத்தின் மூலம் தொகுப்பூதியத்தின் மூலம் பணியமர்த்தப்பட்ட மனுதாரர் உட்பட சில நபர்களுக்கு புதிய பங்களிப்பு ஓய்வூதிய திட்டத்தில் சேர்க்கப்பட நகராட்சி நிர்வாக இயக்குநருக்கு பரிந்துரைத்துள்ளது தெரிய வருகிறது.

இந்நிலையில் மனுதாரரால் மேற்கண்ட பொருள் தொடர்பாக மாண்பமை சென்னை உயர்நீதிமன்றத்தில் வழக்கு W.P.No.10403/2019–ல் ஓய்வூதியம் வழங்க கோரி வழக்கு தொடர்ந்து, அவ்வழக்கில் மனுதாரரின் கோரிக்கை மாண்பமை உயர்நீதிமன்றத்தின் 04.06.2019 நாளிட்ட தீர்ப்பின் அடிப்படையில் மனுதாரரின் கோரிக்கை தொடர்பாக இவ்வழக்கில் இம்முறைமன்ற நடுவத்தால் மேல் நடவடிக்கை தொடர ஏதும் வழிவகை இல்லை என முடிவு செய்து அவ்வாறே இம்முறைமன்ற நடுவம் ஆணையிடுகிறது.

2025ஆம் ஆண்டு, மே திங்கள் 07–ம் நாள் என்னால் கையொப்பமிடப்பட்டு, அலுவலக முத்திரையுடன் இவ்வாணை வெயிடப்படுகிறது.

//ஒப்பம்//

தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்

பெறுநர்

1)திரு.K.கணேசன்,
மின்கம்பி உதவியாளர்(ஓய்வு)
24, S.P.G. பள்ளி சந்து,
துறையூர் – 621 010.
செல். 99943 76749

2)நகராட்சி ஆணையர்,
துறையூர் நகராட்சி,
துறையூர். திருச்சிராப்பள்ளி மாவட்டம்.

3)நகராட்சி நிர்வாக இயக்குநர்,
நகராட்சி நிர்வாக இயக்குநரகம்,
எண்.75, சாந்தோம் நெடுஞ்சாலை,
ராஜா அண்ணாமலைபுரம்,எம்.ஆர்.சி.நகர்,
சென்னை – 600 028.

4)ஒருங்கிணைப்பாளர் (Nodal Officer)
நகராட்சி நிர்வாக இயக்குநரகம்,
எண்.75, சாந்தோம் நெடுஞ்சாலை,
ராஜா அண்ணாமலைபுரம்,
எம்.ஆர்.சி.நகர், சென்னை – 600 028.

நகல்: மாண்புமிகு முறைமன்ற நடுவர் அவர்களின் தனிச் செயலர்
இகோ/உதிரி

//ஆணைப்படி அனுப்பப்படுகிறது//

13/5/25
செயலாளர்